# வடமாகாணக் கல்வித் திணைக்களம்
## இரண்டாம் தவணை நிலையறி பரீட்சை 2021
## தரம் - 4
## தமிழ்மொழி

சுட்டெண்…………..                    நேரம் : 1.00 மணித்தியாலம்

### பகுதி I

➢ **பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

1) புனிதம் என்பதன் ஒத்த கருத்துச்சொல் எது?
   1) ஞானம்   2) உண்மை   3) தூய்மை

2) பெண்கள் என்ற சொல் குறிக்கும் பால் வகை எது?
   1) பலர்பால்   2) பெண்பால்   3) ஒன்றன்பால்

3) இனிப்பு என்பது எவ்வகைப் பெயர்ச்சொல் ஆகும்.
   1) சினைப்பெயர்   2) காலப்பெயர்   3) குணப்பெயர்

4) கரியமில வாயுவை உள்ளெடுப்பது?
   1) மரங்கள்   2) மனிதர்கள்   3) பறவைகள்

5) “அவரவர் திறமைக்கேற்றவாறு பிறருக்கு துன்பம் விளைவிக்காமல் மகிழ்ச்சியாக வாழ்வதே வாழ்க்கை” எனக்கூறியவர்?
   1) சிங்கம்   2)வனக்கடவுள்   3)ஆறு   2

6) “வைத்தியசாலைக்குள் கைத்தொலைபேசியைப் பயன்படுத்துவது தடைசெய்யப்பட்டுள்ளது” என்பது.
   1) அறிவித்தல்   2) அறிவுறுத்தல்   3) கட்டளை

7) வெட்டிக்கொள்வான் ஆனாலும் ஒட்டிக்கொள்வான் அவன் யார்?
   1) கத்தரிக்கோல்   2) கண்ணிமை   3) கடிதம்

8) நம்பமுடியாத கதை.
   1) சுயசரிதை   2) கட்டுக்கதை   3) அகராதி

9) பூ + அரும்பு என்பதை சேர்த்து எழுதினால்.
   1) பூவரும்பு   2) பூஅரும்பு   3) பூரம்பு

10) கோட்டு வாத்தியம் என்பது எவ்வகையான கருவி
   1) நரம்புக்கருவி   2) துளைக்கருவி   3) கஞ்சக்கருவி

(10புள்ளிகள்)

kalvi.lk

➢ **சரியாயின் சரி எனவும் பிழையாயின் பிழை எனவும் எழுதுக.**

1) சந்தையில் காய்கறிகள் வாடி வதங்கிக் காணப்பட்டன. ( )
2) அவன் இளநீரை மடமட என்று குடித்தான். ( )
3) மான் கூட்டம் சிதறி ஓடின. ( )
4) அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு என்ற பழமொழி ஒற்றுமையின் பலத்தைக் குறிக்கிறது. ( )
5) பசுவின் தொனிமரபுச் சொல் கத்தும் என்பதாகும். ( )

(05புள்ளிகள்)

➢ **பொருத்தமான சொல்லைத் தெரிந்து இடைவெளி நிரப்புக.**

1) கற்றாளையின் உள்ளீட்டு மரபுப்பெயர் ...................... ஆகும். (பருப்பு, சோறு)
2) இணரூழ்த்தும் நாறா ......................... கற்றது உணர விரித்துரையாதார். (மலரணையர், மலரனையர்)
3) கடிதம் ............................ யில் இருந்தது. (உரை, உறை)
4) கல்விகற்காதவன் கவிதை .......................... ஒப்பிடுகிறான். (வான்கோழியின் நடனம், மயிலின் நடனம்)
5) அரசர்களுக்கெல்லாம் அரசன் ...................... ஆவார்.(சக்கரவர்த்தி,அமைச்சர்)

(05புள்ளிகள்)

➢ **ஒத்தகருத்துச் சொல்லைத் தெரிவுசெய்க.**

1) புள் (பறவை, மரம்)
2) புனல் (நீர்,நெருப்பு)
3) கீதம் (பாடல், கீதை)
4) உருவம் (பதுமை , மேன்மை)
5) கழனி (வயல். தோட்டம்)

(05புள்ளிகள்)

➢ **எதிர்க்கருத்துச் சொல்லைத் தெரிவுசெய்க.**

1) ஆக்கம் (அழிவு, பகை)
2) நண்பன் (சினேகிதன், பகைவன்)
3) இளமை (முதுமை, வாலிபம்)
4) கவனம் (கவனயீனம், கவலை)
5) அகம் (வீடு, புறம்)

(05புள்ளிகள்)

## ➢ பொருத்தமான விடையின் கீழ் கோடிடுங்கள்.

1) பின்வருவனவற்றுள் சரியான சொல்லைத் தெரிவு செய்க

(கலாச்சாரம், கலாசாரம்)

2) பின்வருவனவற்றுள் சரியான வாக்கியத்தைத் தெரிவு செய்க.

(தாமரைப் பூ மலர்ந்தன, குதிரை வேகமாக ஓடியது)

3) உயர்திணை பன்மை படர்க்கை பெயர்ச்சொல் எது?
(பிள்ளைகள், பெரியம்மா)

4) நாங்கள் சந்தைக்குச் செல்வோம் என்பதை இறந்தகால வாக்கியமாக மாற்றி எழுதினால்.
(நாங்கள் சந்தைக்குச் சென்றோம், நாங்கள் சந்தைக்குச் செல்கின்றோம்)

5) அவன் விமான விபத்தில் இறந்துவிட்டான்! இங்கு வியப்புக்குறி உணர்த்தும் உணர்ச்சி யாது?
(அதிர்ச்சி, அச்சம்)

(10புள்ளிகள்)

Education கல்வி අධ්‍යාපන

# வடமாகாணக் கல்வித் திணைக்களம்
## இரண்டாம் தவணை நிலையறி பரீட்சை 2021
## தரம் - 4
## தமிழ்மொழி

சுட்டெண்…………..  நேரம் : 1.30மணித்தியாலம்

1) பின்வரும் வினாக்களுக்கு விடை தருக

1) கிராமிய விளையாட்டுக்கள் இரண்டு தருக?

……………………………………………………………………

2) ‘காய்கள் கட்டிய வெருளி’’ என்ற பாடலின் ஆசிரியர் யார்?

……………………………………………………………………

3) சந்தர்ப்பத்தை தவறவிடக்கூடாது என்ற கருத்தை உணர்த்தும் பழமொழி யாது?

……………………………………………………………………

4) இலங்கையில் கொண்டாடப்படும் பண்டிகைகள் இரண்டைக் குறிப்பிடுக?

……………………………………………………………………

5) சிலையை செதுக்குபவன் யார்?

……………………………………………………………………

Education கல்வி அධ්‍යාපන

6) இக்குறியீட்டின் கருத்து யாது?



……………………………………………………………………

7) செல்லும் இடமெல்லாம் சிறப்பு பெறுபவர் யார் என மூதுரைப்பாடலில் குறிப்பிடப்படுகிறது?

……………………………………………………………………

8) கணக்காயர் என்பதன் கருத்து யாது?

……………………………………………………………………

9) காகிதம் எந்த நாட்டில் கண்டுபிடிக்கப்பட்டது?

……………………………………………………………………

10) என்னை நீங்கள் பார்க்கலாம் தொடலாம் ஆனால் பிடிக்க முடியாது.நான் யார்?

……………………………………………………………………

(10x3= 30புள்ளிகள்)

kalvi.lk

**2) பின்வரும் ஒருமை வாக்கியங்களைப் பன்மை வாக்கியங்களாக மாற்றி எழுதுக.**

1. புறா பறந்து சென்றது.

   ...........................................................................................................................
2. நட்சத்திரம் வானில் மின்னியது.

   ...........................................................................................................................
3. தாமரைப் பூ மலர்ந்தது.

   ...........................................................................................................................
4. குதிரை வேகமாக ஓடியது.

   ...........................................................................................................................
5. வானத்தில் இருந்து கல் விழுந்தது.

   ...........................................................................................................................

(10 புள்ளிகள்)

3) **கீழே தரப்பட்டுள்ள எதிர்கால வாக்கியங்களை, இறந்தகால வாக்கியங்களாக மாற்றி எழுதுக.**

1. நான் அழகிய காட்சிகளை வரைவேன்.

   ...........................................................................................................................
2. நான் நூலகத்திற்குச் செல்வேன்.

   ...........................................................................................................................
3. நாங்கள் சந்தைக்குச் செல்வோம்.

   ...........................................................................................................................
4. நாங்கள் கடற்கரையில் மணல் வீடு கட்டி விளையாடுவோம்.

   ...........................................................................................................................

(08 புள்ளிகள்)

3) **கீழே தரப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்தி செய்க**

சங்கரனுக்கு ஒன்பது வயதாகின்றது. அவன் பிறந்த இடம் கண்டி, அவனது அப்பாவின் பெயர் சிவராமன், சங்கரன், பூங்குன்றம் தமிழ் வித்தியாலயத்தில் தரம் நான்கில் கல்வி கற்கின்றான். வகுப்பாசிரியரின் பெயர் க.தாமரைச்செல்வி. முத்திரை சேகரிப்பது அவனது பொழுதுபோக்காகும். அவன் எனது வீட்டுத்தோட்டம் என்ற தலைப்பில் சித்திரம் வரைந்து, போட்டிக்கு அனுப்பவுள்ளான். உங்களைச் சங்கரனாகக் கருதிக்கொண்டு சித்திரப்போட்டிக்கான விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்யுங்கள்.

## சித்திரப்போட்டி விண்ணப்பப்படிவம்


1. சித்திரத்தின் தலைப்பு : ..................................................
2. மாணவர் முழுப்பெயர் : ..................................................
3. பிறந்த திகதி : ..................................................
4. கற்கும் பாடசாலை : ..................................................
5. கற்கும் வகுப்பு : ..................................................

மேற்குறிப்பிட்ட தகவல்கள் அனைத்தும் உண்மையானவை என உறுதிப்படுத்துகிறேன்.

.......................................
மாணவரது கையொப்பம்

(06புள்ளிகள்)

3) கீழே தரப்பட்டுள்ள காட்சிப்படத்தை அவதானித்து நான்கு வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொற்களுக்கு மேல் இடம்பெற வேண்டும்.எழுவாய் பயனிலை தொடர்புகளும் எழுத்துக்கூட்டலும் சரியாக இருக்கவேண்டும்)



..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

(06புள்ளிகள்)